DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-27/2022

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அந்தோணி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 present, A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

02.12.2025- 04.15 PM

முதல் விசாரணை:-

1. நான் கமுதியில் குடியிருந்து மேளம் வாசிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.3 ஐ தெரியும்.

2. கடந்த 25.06.2021ந் தேதியன்று மதியம் 12.30 மணியளவில் சம்பவ இடமான இலந்தைகுளத்தில் உள்ள நடராஜர் செட்டியாருக்கு சொந்தமான பனந்தோப்பில் வைத்து போலீசார் செல்வராஜ் மற்றும் என் முன்னிலையில் வைத்து மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அங்கு வைத்து போலீசார் தயார செய்த பார்வை மகஜரில் நானும், எனது மச்சான் செல்வராஜும் கையொப்பம் செய்தோம். மேற்படி சம்பவ இடத்தை போலீசார் எனது தம்பியிடம் செல்போன் மற்றும் தங்க நகையை பறித்த சம்பவத்திற்காக தயாரிக்கப்பட்டது ஆகும். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் போலீசாரிடம் எத்தனை கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் ஒரு கையொப்பம் மட்டும் சம்பவ இடத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கின் புகார்தாரர் எனது சித்தப்பா மகன் என்பதால் காவல்நிலையத்தில்

வைத்து கையெழுத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் கையெழுத்திட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

(2வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், 1வது எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறினார்).

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி